# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை–காஞ்சிபுரம் மாவட்டம்
## (07.10.2015 முதல் 11.10.2015 வரை)

**கடந்த ஐந்து நாட்களில் நிலவிய வானிலை** (01.10.2015 முதல் 05.10.2015 வரை)

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 75.4 மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 32.0–36.0°C மற்றும் 23.0–25.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 67 முதல் 91 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 5–10 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 07.10.2015 | 08.10.2015 | 09.10.2015 | 10.10.2015 | 11.10.2015 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 20 | 25 | 12 | 16 | 15 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்று வரும் திசை | தென்தென் கிழக்கு | தென்தென் கிழக்கு | தென்தென் கிழக்கு | தென்தென் கிழக்கு | தென்தென் கிழக்கு |
| வெப்பநிலை °C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை °C | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை °C | 24 | 24 | 24 | 24 | 24 |
| ஈரப்பதம் | 74–75 | 74–75 | 72–75 | 72–75 | 74–75 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. மழைக்காலம் துவங்குவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. உழவர்கள் தங்கள் கால்நடைகளை ஏரி அல்லது குளத்தின் அருகில் உள்ள புற்களை மேயாமல் பார்த்துக் கொள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
4. அதிக ஈரப்பதமும் வெப்பமும் ஒட்டுண்ணிகள் மற்றும் ஈக்களின் பெருக்கத்தை அதிகபடுத்தும். எனவே, உழவர்கள் முறையாக கொட்டகையை சுத்தம் செய்து கால்நடைகளின் சாணத்தை மூடி எருக்குழியில் சேகரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுண்ணிகளால் பரவும் நோய் கட்டுபடுத்தப்படுகிறது.
5. கன்றுகள், செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்கு சரியான குடற்புழு நீக்க மருந்து அளித்து குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.
6. பிறந்த கன்றுகளுக்கு கன்று பிறந்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக சீம்பால் அளிக்க வேண்டும். இதன் மூலம் கன்றுகளுக்கு தேவையான நோய் எதிர்ப்பு திறன் கிடைக்கிறது.
7. கோழிப்பண்ணைகளில் தூய்மையான குடிநீர் அளிப்பதன் முலம் ஈ கோலை நோய்த் தாக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**
**(வேளாண் அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம்)**

**முக்கிய பயிர்கள்: நெல், கரும்பு மாற்றும் வேர்க்கடலை**

1. உழவர்கள் தற்போது வேர்கடலை பயிருக்கு களை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
2. காய்கறி பயிர்களின் உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் காணப்பட்டால் 5 சதவித அளவு வேப்பங் கொட்டை கரைசலை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. சொட்டு நீர்ப் பாசனம் மேற் கொள்வதன் மூலம் நீர்த்தேவையைக் குறைக்கலாம்.
4. நெற்பயிரில் இலைப்புள்ளி நோயின் தாக்கம் காணப்பட்டால் மேன்கோசெப் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணிரில் 2 கிராம் என்ற அளவு கலந்து 15 நாட்கள் இடை வெளியில் 2 அல்லது 3 முறை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
5. வெண்டை செடியில் வெள்ளை ஈ தாக்குதல் காணப்பட்டால் மேத்தேன் டேமேடன் 2 மில்லி/லிட்டர் அல்லது டைமித்தியேட் 2 மில்லி/லிட்டர் என்ற அளவில் பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
6. மிளகாய் செடியில் காய் துளைக்கும் வண்டுகளை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 5 என்ற அளவில் வைக்கவும்.
7. கரும்புப் பயிருக்கு 2.5 சதவிகித அளவு பொட்டாஷ் மற்றும் யூரியா கலந்த தண்ணிரை 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும்.